சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.107/2021</u>

15.10.2025

வா.சா.4 திரு.முனியாண்டி, த/பெ. ராமசாமி

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுதப்படிக்க தெரியாது, கையெழுத்து மட்டும் போடுவேன். நான் எருக்காட்டூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் துணைத்தலைவராக இருந்தேனா என்றால் ஆமாம் இருந்தேன். அந்த சங்கத்தில் 1 ஆம் பிரதிவாதி அன்பழகன் உறுப்பினர் என்றால் இல்லை. நான் எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை துணைத்தலைவராக இருந்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் துணைத்தலைவர் பதவியிலிருந்து விலகிய பின்னிட்டு அன்பழகன் உறுப்பினர் ஆனதை கேள்விப்பட்டேன். தாவா சொத்துக்களை அடமானம் வைத்து அன்பழகன் கடன் வாங்கியுள்ளார் என்றாலும் அப்போது நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றாலும் இல்லை. அன்பழகன் அப்பா கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் 1977 ஆம் வருடம் ஒப்பந்த உதவியாளர் வேலை செய்தார் என்றால் சரிதான். பக்கிரிசாமியுடன் நானும் ஒப்பந்தத்தில் சேர்ந்து செய்தேன் என்றால் இல்லை. பக்கிரிசாமி எங்கள் ஊரைச்சேர்ந்த சீனிவாச ஐயங்காருக்கு சொந்தமான 9 ஏக்கர் நிலங்களை குத்தகை செய்தார் என்றால் இல்லை, ராவுத்தர் பங்கை தான் குத்தகை பார்த்தார். சீனிவாச ஐயங்கார் இடத்தை பக்கிரிசாமி வாங்கியுள்ளாரா என்றால் இல்லை. 1984 ல் பக்கிரிசாமி அன்பழகன் பெயரில் கமலாபுரத்தில் சாராயக்கடை ஏலம் எடுத்தார் என்றால் இல்லை, பக்கிரிசாமி ஏலம் எடுத்தார் என்றாலும் அதற்கு நான் உதவி செய்தேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களின் வழக்கு விவரம் எனக்கு நேரடியாக தெரியும். நான் சாட்சி கையொப்பம் போட்டதாக சொல்லும் பத்திரங்களை படித்து காண்பித்தார்கள், நான் கேட்டுள்ளேன். வா.சா.ஆ.2, 4, 7 ஆவணங்களை பதிவு செய்த போது அசோகன் ஊரில் இருந்தாரா என்றால் இல்லை. கலா இருந்தார் ஆனால், பதிவு அலுவலகத்திற்கு வரவில்லை. வா.சா.ஆ.2, 4, 7 ஆவணங்களுக்காக அசோகன் எந்த வகையில் எவ்வளவு ரூபாய் அனுப்பினார் என்றால் தேதி தெரியவில்லை. அசோகன் நேரடியாக அவ்வப்போது ரூ.10,000/-, ரூ.5000/- கொடுப்பார். வா.சா.ஆ.2, 4, 7

ஆவணங்களில் கண்ட சொத்துக்களை கிரயம் பெற எவ்வளவு செலவானது என்று எனக்கு தெரியாது ஆனால் குழி 50 ரூபாய். பட்டா பக்கிரிசாமி பெயரில் இருந்தது என்றால் சரிதான். பக்கிரிசாமி பெயரில் பட்டா மாறிய விவரம் அசோகனுக்கு அப்போதே தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 4, 7 ஆவணங்களில் பணம் பக்கிரிசாமி கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அசோகன் நேரடியாக கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றாலும் சரியல்ல. அசோகன் பணம் கொடுத்ததற்கான கணக்கை அசோகன் வைத்துள்ளாரா என்றால் வைத்துள்ளார். தாவா சொத்துக்களை பக்கிரிசாமி அன்பழகன் பெயரில் எப்போது எழுதிவைத்தார் என்றால் 2013 ஆம் வருடம் அன்பழகன் அவர் பெயரில் கம்பெனி வைக்கவேண்டும் என சொல்லி பக்கிரிசாமியிடமிருந்து எழுதிவாங்கினார். அன்பழகன் பெயரில் எழுதிய வாங்கிய பின்னிட்டு அடமானம் வைக்க கடன் வாங்கினாரா என்றால் எனக்கு தெரியாது. 2013 ஆம் வருடத்திலேயே பக்கிரிசாமி என்னிடம் தவறுதலாக அன்பழகனுக்கு எழுதிக்கொடுத்துவிட்டதாக சொன்னார். பக்கிரிசாமி சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என சொன்னாரா என்றால் சொன்னார் சட்ட நடவடிக்கை எடுத்தாரா என்று எனக்கு தெரியாது. பக்கிரிசாமி சொன்ன விவரத்தை அசோகனிடம் 2013 ஆம் வருடத்திலேயே நான் சொல்லிவிட்டேன். அசோகன் நடவடிக்கை எடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. 1985 ஆம் வருடம் என் மீது நரசிம்மன் என்பவர் புகார் கொடுத்தார் என்றாலும் அதனடிப்படையில் நான் 15 நாட்கள் சிறையில் இருந்தேன் என்றாலும் சரியல்ல. பக்கிரிசாமி சாகுபடி செய்த ராவுத்தர் நிலங்களை அசோகன் பெயரிலும், பக்கிரிசாமி பெயரிலும் கிரயம் வாங்கப்பட்டது. ராவுத்தர் நிலங்களை அசோகன் வாங்கிய பின்னிட்டு அன்பழகன் வழக்கு போட்டார் என்றால் எனக்கு தெரியாது. குடவாசல் கூட்டுறவு நில வள வங்கியில் தாவா சொத்துக்களை அடமானம் வைத்து முருகேசன் பெயரில் டிராக்டர் லோன் வாங்கப்பட்டது. அந்த லோனுக்கு பக்கிரிசாமி ஜாமீன் கையொப்பம் போட்டார் என்றால் எனக்கு தெரியாது. குடும்ப பிரச்னை சம்பந்தமாக ராஜா கொடுத்த புகாரில் நான் 15 நாட்கள் சிறையில் இருந்தேன் என்றால் ஆமாம். கொரடாச்சேரி காவல்நிலைய குற்ற எண் 33/2022 என்ற எண்ணில் என் மீது வழக்கு உள்ளது என்றால் சரிதான், அது பொய்வழக்கு. எனக்கும் அன்பழகனுக்கும் விரோதம் உள்ளதா என்றால் இல்லை. அசோகன் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் சொத்தை ஏமாற்றி எழுதி வாங்கியதாக சொல்லி வழக்கு தாக்கல்

செய்துள்ளார். நான் தற்போது வழக்கிற்காக அசோகன் குடும்பத்தை பராமரிக்க தாவா சொத்துக்கு பணம் கொடுத்து பக்கிரிசாமி பெயரில் வாங்கியதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசோகனுக்கும் பக்கிரிசாமிக்கும் சுமூகமான உறவு இல்லை என்றாலும் பக்கிரிசாமி தான் அன்பழகனை பராமரித்துவந்தார் என்றாலும் சரியல்ல. அதனால்தான் சொத்தை அன்பழகன் பெயரில் பக்கிரிசாமி எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. பக்கிரிசாமி இறப்பதற்கு முன்பு 7 மாதங்கள் என்னுடன் வசித்து வந்தார். நான் எனக்கு அசோகன் வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசோகன் ஆலோசனையின் பேரில் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசோகன் தாவா சொத்தில் உள்ள நிலத்தில் மீன்வளர்ப்பதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.